## தமிழ்நாட்டிற்கு எதுவுமே செய்யாமல் தேர்தல் களத்திற்கு மட்டும் வந்துள்ள

# பி.ஜே.பி.க்கும் அடிமை அ.தி.மு.க.வுக்கும் பட்டை நாமம் தான் பரிசாய்க் கிடைக்கும்!

ஒன்றிய பி.ஜே.பி கட்சியின் பிரதமர் மோடி அவர்களும், உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களும், ஒன்றிய அமைச்சர்களில் ”மன்னர்” எனத் தன்னை நினைக்கும் தர்மேந்திரா பிரதான் அவர்களும் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டைப் புறக்கணித்துவிட்டு தேர்தல் நேரத்தில் இங்கே வந்து பசப்பு வார்த்தைகளைப் பரப்புரைகளாகப் பேசி, தமிழ்நாட்டு மக்களை வழக்கம் போல் ஏமாற்றப் பார்க்கிறார்கள்.

எல்லாவற்றையும் அமைதியாகப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் தமிழ்நாட்டு மக்கள்! அவர்கள், இவர்களுக்கு இம்முறையும் பட்டை நாமம்தான் போடுவார்கள் என்பதில் நமக்கு எள்ளளவும் ஐயமில்லை! என்றாலும், உரிய நேரத்தில் தமிழ்நாட்டு மக்களுக்குச் சில உண்மைகளை நினைவுபடுத்த வேண்டியது நம் கடமையல்லவா!

ஒன்றிய அரசு ஆண்டு தோறும் பட்ஜெட் போடுகிறது. அதற்கு நிதி வேண்டும்; அந்த நிதி மாநிலங்கள் ஒவ்வொன்றும் ஜி.எஸ்.டி முதலான பல்வேறு வரிகளை வழங்குவதன் மூலமாகத் தான் கிடைக்கிறது.

**மாநிலங்கள் வரி கொடுக்கவில்லை என்றால், ஒன்றிய அரசுக்குத் தனியே நிதி இல்லை, மாநிலங்கள் இல்லாமல் ஒன்றியம் இல்லை! ஒன்றிய அரசும் இல்லை !**

இந்த ஜி.எஸ்.டி முதலான வரிகளில், தமிழ்நாடுதான் ஒன்றிய அரசுக்கு மிக அதிகமாக நிதியை வாரி வழங்கி வருகிறது.

மாநிலங்கள் இப்படி வழங்கிவரும் நிதியைக் கொண்டு பட்ஜெட் போடும் ஒன்றிய அரசு எல்லா மாநிலங்களுக்கும் உதவ வேண்டும். தமிழ்நாட்டிற்கு அள்ளித் தர வேண்டாம் அதன் பங்கிற்குக் கிள்ளியாவது தரவேண்டாமா?

ஒன்றிய அரசின் திட்டங்களைத் தருகிறோமே, அதன் மூலம் தமிழ்நாட்டிற்கும் நிதி கிடைக்கிறதே என்கிறார்கள். தமிழ்நாடு ஒரு ரூபாய் வரியாக ஒன்றிய அரசுக்கு வழங்கினால் வெறும் 29 பைசாதான் அந்தத் திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கிறது.

ஒன்றிய அரசின் அமைச்சர் பியூஸ் கோயல் ரூ. 80 ஆயிரம் கோடி தமிழ்நாட்டிற்குத் தந்துள்ளோம் என்கிறார். சரி ! மற்ற மாநிலங்களுக்கு எவ்வளவு தந்துள்ளீர்கள், தமிழ்நாட்டிலிருந்து ஒன்றிய அரசுக்கு வரியாக எவ்வளவு தந்துள்ளீர்கள் என்பதைச் சொல்லுங்கள் என்கிறார் திராவிட நாயகர். மனசாட்சியுள்ள ஒன்றிய அமைச்சர் சொல்லவேண்டும் அல்லவா ? ஏன் சொல்லவில்லை ?

### ஒரு கண்ணில் வெண்ணெய் மறு கண்ணில் சுண்ணாம்பு

மாநிலங்கள் புயல்,மழை, வெள்ளம், பூகம்பம் முதலிய பேரிடர்களால் பாதிக்கப்படும் போது, அதற்கு நிவாரணமாக வழங்கிட பேரிடர் நிவாரண நிதி என்று ஒன்றியத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் புயல், வெள்ளம், உயிர்ப் பலி, பயிர்ச் சேதம், வீடுகள் சாலைகள் சேதம் என நிகழ்ந்தால் இழப்பீடாக வழங்கிட அந்தப் பேரிடர் நிவாரண நிதியில் இருந்து வழங்குமாறு ஒன்றிய அரசிடம் நிதி உதவி கேட்கிறோம். நமது முதலமைச்சர் ஒன்றிய அரசுக்குக் கடிதம் எழுதியும், நேரடியாகச் சென்றும் நிவாரண நிதியுதவி கேட்கிறார்கள். கேட்பது நமது உரிமை.

நாம் நிவாரணம் கோரும் போதெல்லாம் ஒன்றிய அரசின் ஆய்வுக் குழு வருகை தந்து, சேதங்களைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து, ஒன்றிய அரசுக்குப் பரிந்துரையாக அறிக்கையையும் வழங்குகிறது. ஆனால், தமிழ்நாட்டிற்கு நிதியுதவி கோரி குரல் எழுப்பினால் ஒன்றிய அரசு கேளாக்காதுடன் மௌனம் சாதிக்கிறது.

அதே நேரத்தில், அவர்களுடைய சொந்த மாநிலமான குஜராத் மாநிலத்தில் மழை என்றால் வெள்ளம் பெருக்கெடுத்து சேதம் விளைவிக்கிறதோ இல்லையோ குறைந்தது 1000 கோடி ரூபாயை உடனடியாக மூட்டை கட்டிக் கொண்டு போய்க் கொடுத்து ஆறுதல் கூறி வருகிறது.

தமிழ்நாட்டில் ஒரு பழமொழி சொல்லுவார்கள், “ஒரு கண்ணில் வெண்ணெய் மறு கண்ணில் சுண்ணாம்பு” என்று; அது தானே இந்த ஒன்றிய பி.ஜே.பி.அரசின் செயல்! கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த ஒன்றிய அரசு இப்படிப் பாரா முகமாகத் தமிழ்நாட்டைப் புறக்கணித்து வந்ததற்குப் பல சான்றுகளைக் கூறலாம்

நிக்ஜாம் புயல் பாதித்த சென்னை, செங்கல்பட்டு, காஞ்சி, திருவள்ளூர் மாவட்டங்களும் நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி தென் மாவட்டங்களும் பாதிக்கப்பட்டபோது கேட்ட நிதி கிடைக்கவில்லை.

1. தமிழ்நாட்டிற்குப் புதிய ரயில்வே திட்டங்கள் இல்லை. பத்து ஆண்டுகளுக்கு முன்பு அறிவிக்கப்பட்ட திட்டங்களையும் நிறைவேற்றுவது இல்லை. நாடு முழுவதும் புதிய வழித்தடங்களுக்கு அறிவிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ.31 ஆயிரம் கோடி என்றால், தெற்கு ரயில்வேக்கு ரூ.301 கோடி மட்டும் தான்.

2. பொய்யான காரணத்தைச் சொல்லி கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை முடக்கி விட்டார்கள்.

3. கோவை, மதுரை விமான நிலைய விரிவாக்கத் திட்டத்துக்கு ஒப்புதல் தரவில்லை; மதுரை பன்னாட்டு விமான நிலையத்துக்கும் ஒப்புதல் தரவில்லை.

4. தமிழ்நாட்டிற்கு வந்தால் பிரதமர் உட்பட தமிழ்மொழியின் பெருமையை புகழ்ந்து சொல்வார்கள். ஆனால், தமிழ் வளர்ச்சிக்கு ரூ. 130 கோடி மட்டும் வழங்கிவிட்டு; செத்த மொழி சமஸ்கிருதத்திற்கு ரூ. 2532 கோடி என மிகப் பெரிய அளவில் நிதியை வழங்குவார்கள்.

5. கும்பகோணத்தில் அமைய உள்ள கலைஞர் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவுக்கு ஆளுநர் ரவி ஒப்புதல் அளிக்காமல், குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய மசோதாவுக்கு அவரும் ஒப்புதல் அளிக்காமல் முடக்கி வைத்துள்ளார்.

6. பொது விநியோகத் திட்டம் மற்றும் ஒன்றிய அரசின் பிற நலத் திட்டங்களுக்குச் செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கிவரும் நிலையில், அதற்கு முட்டுக்கட்டை போடும் விதிமுறைகளை ஒன்றிய அரசு வகுத்துள்ளது. இதனை நீக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், பிரதமர் அவர்களுக்கு கடிதம் மூலமாக எழுதிக் கோரிக்கை வைத்துள்ளார்.

7. நெல் கொள்முதல் ஈரப்பதத்தை 17 விழுக்காட்டில் இருந்து 22 விழுக்காடாக உயர்த்த வேண்டும் என்று தமிழ்நாட்டு விவசாயிகளுக்காகக் கேட்டோம். புறக்கணித்தார்கள்

8. தமிழ்நாட்டிற்கு சமக்ரசிக்ஷா திட்டத்தின்கீழ் விடுவிக்கப்பட வேண்டிய 3548.22 கோடி ரூபாயை இதுவரை ஒன்றிய அரசு விடுவிக்காமல்நிறுத்தி வைத்துள்ளது.

9. தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படும் ஒன்றிய அரசின் ஜல்ஜீவன் திட்டத்திற்கு ரூ. 3500 கோடிக்கு மேல் நிதி வரவில்லை

10. பிரதமர் வீடு கட்டும் திட்டத்திற்கும் ஒன்றிய அரசின் பங்குத் தொகை வந்து சேரவில்லை

11. தொழிலாளர் சட்டங்கள் தொடர்பாக தமிழ்நாடு அரசால் எடுத்து வைக்கப்பட்ட கருத்துகளை ஒன்றிய அரசு ஏற்கவில்லை. தொழிலாளர் நலச்சட்டத் தொகுப்புகள் ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள தொழிலாளர்களின் உரிமைகள், பாதிக்கக்கூடாது என்கிறோம்.

12. இலங்கை கடற்படையால் இந்திய மீனவர்கள் பாதிக்கப்படுவதற்கு நிரந்தர தீர்வு காணப்படவில்லையே. பாஜக ஆய்ச்சி வந்தால் மீனவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்றார் மோடி; ஆட்சி வந்து 12 ஆண்டுகளுக்கு மேல் ஆயிற்று இலங்கையின் கொடுமை பல மடங்கு அதிகரித்துவிட்டது

13. ஆசிரியர்களுக்காகக் கட்டாயத் தேர்வை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளது. தற்போது ஆசிரியர்களாகப் பணிபுரிபவர்களின் பணி மற்றும் பதவி உயர்வை ஒன்றிய அரசு பாதுகாக்க வேண்டும். உரிய சட்டத் திருத்தம் செய்ய வேண்டும். நாம் வலியுறுத்தியும் முயற்சியே இல்லையே

14. கிராமப்புற ஏழைகளுக்கு மிக முக்கியமான திட்டமாக இருக்கும் மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திட்டத்தில் காந்தியடிகளின் பெயரை நீக்கிவிட்டு மதவாதச் சிந்தனையுடன் புதிய பெயரைச் சூட்டுகிறது. மூன்றில் ஒரு பங்கு நிதியை மாநில அரசு மீதும் சுமத்துகிறது பா.ஜ.க. அரசு. இத்திட்டத்தில் ஒன்றிய அரசு இதுவரை தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய ரூ.1,290 கோடியை உடனடியாக வழங்க வேண்டும் கேட்கிறோம். கொடுக்கப்படவில்லை.

### மாநில அரசுக்கு எதிராக ஆளுநர்

சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பிவைக்கப்படும் மசோதாக்ளுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் அழிச்சாட்டியம் செய்து வருவதுடன் மாநில அரசுக்கு எதிராக செயல்பட அவரை ஒன்றிய அரசு தூண்டுகிறது .

நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று பேரவையில் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்குப்பல முறை அனுப்பி வைக்கப்பட்டும் தமிழ்நாட்டின் குரல் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதனால், அரியலூர் கண்மணி அனிதா முதல் ஏறத்தாழ 30 இளைஞர்களின் உயிர்களை வாங்கியுள்ளார்கள்.

### கீழடி ஆய்வறிக்கைக்கும் மறுப்பு!

தமிழ்ச் சமுதாயத்தின் தொன்மையையும் பெருமைகளையும் ஆதாரங்களுடன் பறைசாற்றும் கீழடி அகழாய்வு அறிக்கைக்கும் வஞ்சக நெஞ்சுடன் ஒப்புதல் வழங்க மறுக்கிறது.

இப்படி, தமிழ்நாடு அரசு முன் வைக்கும் கோரிக்கைளை எல்லாம் தள்ளுபடி செய்துவிட்டு; தற்போது சட்டமன்றத் தேர்தல் நடைபெறுகிறது என்பதற்காக ஒன்றிய பா.ஜ.க அரசின் பிரதமர் மட்டுமல்லாமல் அமைச்சர்கள் பா.ஜ.க ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் எல்லாம் தமிழ்நாட்டை நோக்கிப் படையெடுத்து வருகிறார்கள்.

அவர்கள் மட்டுமா? அவர்களுடன் அணி சேர்ந்துள்ள பாதம் தாங்கிப் பழனிச்சாமி அவர்களின் உதவாக்கரை கூட்டணிக் கட்சிகளும் சேர்ந்துவந்து கூக்குரல் கொடுக்கிறார்கள்

ஐந்து ஆண்டுகளாக ஒன்றிய பா.ஜ.க அரசு அலட்சியத்துடன் காட்டிவரும் மாற்றாந்தாய் மனப்பான்மையை தமிழ்நாடு மக்கள் கண்டவர்கள் அல்லவா?

தமிழ்நாட்டிற்கு எதிராக தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் திட்டங்களைத் தராமல், நிதியுதவியும் அளிக்காமல் பா.ஜ.க அரசு புறக்கணித்த நேரங்களில் எல்லாம் இந்த பழனிசாமி அவர்களும், கூக்குரல் எழுப்பும் அவர்களின் கூட்டணித் தலைவர்களும் தமிழ்நாட்டிற்காக ஒரு முறையாவது ஒரே ஒரு முறையாவது, இன்று கூடிக்குலவும் ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்திருப்பார்களா ?

அவ்வளவு ஏன்? நாங்களும் பி.ஜே.பி தான் என்று பவனிவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பி.ஜே.பியின் பகடைக் காய்களாம் தமிழ்நாட்டுத் தலைவர்களாவது கேட்டிருப்பார்களா? இப்படி, தமிழ்நாட்டிற்காக எதையுமே கேட்காதவர்கள், இன்று தேர்தல் வந்ததும், ஜால்ரா போட்டுக்கொண்டு, மத்தளம் கொட்டுகிறார்களே, என்ன நியாயம் ?

பி.ஜே.பியும் எடப்பாடி பழனிசாமி கூட்டமும் தமிழ்நாட்டிற்குச் செய்து வரும் பாதகங்களைப் பார்த்துக் கொண்டுதானே இதுவரை நடந்து முடிந்துள்ள பத்து தேர்தல்களிலும் தமிழ்நாட்டு மக்கள் அவர்களை ஒதுக்கித்தள்ளி வைத்துள்ளார்கள்.

### இப்போது மட்டும் என்ன செய்வார்கள்?

விவசாயிகள் சொல்வது போல் உழவு செய்யும் நேரத்தில் ஊரைச் சுற்றிவிட்டு அறுவடைக் காலத்தில் அரிவாளும் கையுமாய் வயலுக்கு வந்தால் என்ன கிடைக்கும்? என்று கேட்டு விட்டு; அந்த வயலைப் போல் அவர்களுக்குப் பட்டை நாமத்தைப் போட்டு விட்டு; போய்வாருங்கள் புண்ணியவான்களே, உங்களுக்கு“தன்யவாந்த்”என்பார்கள்.!

சராசரி மனித இயல்பு அதுதானே ! தமிழ்நாடு மட்டும் இதற்கு எப்படி விதிவிலக்காய் இருக்க முடியும் ? 2024 நாடாளுமன்றத் தேர்தலில் போட்ட பட்டை நாமத்தை இப்போதும் 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலிலும் போடுவார்கள் என்பது உறுதியே!

*****



**அழிவு சக்தியிடமிருந்தும், அடிவருடும் அரை மனிதரிடமிருந்தும், தமிழ்நாடு காப்பாற்றப்படுவது கழக அரசு இருப்பதால்தான்;**

**பிற்போக்கு நச்சுகளைத் தடுக்கும் பெரிய ராணுவம் ஸ்டாலின்; அவர் தொடரட்டும், அன்னைத் தமிழ்நாடு வெல்லட்டும்!**